இயற்கையின் சான்றுகள்

கடல் அமைதியாக இருந்தது, சில இறை மறுப்பாளர்கள் கப்பலில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள், கடலில் பயணமும் மேற்கொண்டார்கள். பயணத்தின் துவக்கத்தில் காற்று அல்லாஹ்வின் கருணையால் சாதகமானதாக அமைந்தது, கப்பல் வேகமாக மிதந்து சென்றுகொண்டிருந்தது, பயணமும் அமைதியானதாகவே இருந்தது. பயணிகள் தங்கள் மகிழ்ச்சியுடன் தாங்கள் சென்றடையவேண்டிய திசையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தார்கள், திடீரென காற்றின் திசை மாறியது, புயற்காற்றுகளும் சூழ்ந்துகொண்டன, மிகவும் உயரமான அலைகளுக்கிடையே கப்பல் கட்டுக்கடங்காத நிலையில் ஆட்டம் கொண்டது. பயணிகள் தங்களுடைய மரணத்தைக் கண்கூடாகக் கண்டவர்களாகக் கூக்குரலிட்டுக் கதறினர், அல்லாஹ்விடம் உதவி நாடியவர்களாக எங்களைக் காப்பாற்றுவாயாக, இந்த இக்கட்டான நிலையிலிருந்து எங்களை விடுவிப்பாயாக என்று மன்றாடினர். இதனைத் திருக்ஃகுர்ஆன் கூறுகின்றது:

هُوَ ٱلَّذِى يُسَيِّرُكُمْ فِى ٱلْبَرِّ وَٱلْبَحْرِ ۖ حَتَّىٰٓ إِذَا كُنتُمْ فِى ٱلْفُلْكِ وَجَرَيْنَ بِهِم بِرِيحٍ طَيِّبَةٍ وَفَرِحُوا۟ بِهَا
جَآءَتْهَا رِيحٌ عَاصِفٌ وَجَآءَهُمُ ٱلْمَوْجُ مِن كُلِّ مَكَانٍ وَظَنُّوٓا۟ أَنَّهُمْ أُحِيطَ بِهِمْ ۙ دَعَوُا۟ ٱللَّهَ مُخْلِصِينَ
لَهُ ٱلدِّينَ لَئِنْ أَنجَيْتَنَا مِنْ هَٰذِهِۦ لَنَكُونَنَّ مِنَ ٱلشَّٰكِرِينَ ﴿٢٢﴾ (يونس: 22)

பொருள்: தரையிலும் கடலிலும் உங்களை நடத்திச்செல்பவன் அவனே. பிறகு, நீங்கள் கப்பலில் ஏறி, சாதகமாக வீசும் காற்றோடு மகிழ்ச்சியுடன் பயணம் செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று கடுமையான எதிர்க்காற்று வீசுகின்றது, மேலும் எல்லாப்பக்கங்களிலிருந்தும் அலைகள் தாக்குகின்றன, அப்பொழுது தாம் பெரும் பிரளயத்தால் சூழப்பட்டுள்ளதாகப் பயணிகள் எண்ணுகின்றார்கள். அந்நேரத்தில் அவர்கள் தீனை (தாம் கீழ்ப்படிவதை) அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி, இறைவா, இத்துன்பத்திலிருந்து நீ எங்களைக் காப்பாற்றினால் நிச்சயமாக நாங்கள் நன்றியுடையவர்களாய் இருப்போம் என்று அவனிடம் இறைஞ்சுகிறார்கள் (யூனுஸ்:22)

இதுதான் இயற்கையின் சான்று. மனிதன் கடுமையான இன்னல்களுக்கு ஆளாகும் நிலையில் அல்லாஹ் மட்டும்தான் அவன் ஞாபகத்திற்கு வருகிறான், அவனிடமே உதவியும் நாடுகிறான். ஆனால், மனிதன் அல்லாஹ்வை மறந்தவனாகவோ உலக இன்பங்களில் மூழ்கியிருக்கும் காரணத்தினாலோ அவனுடைய இயல்பான, இயற்கையான பார்வைக்கண்ணாடி துருப்பிடித்தும் மாசு படிந்தும்விடுகிறது. உண்மை என்னவென்றால், அல்லாஹ் மனிதனை இஸ்லாமிய இயல்புகளுடனேயே படைத்துள்ளான், அவன் இருக்கின்றான் என்ற உணர்வினை

www.uzairfalahi.com

மனிதனுடைய இயல்புகளுடனே பிசைந்து கலந்துள்ளான். திருக்ஃகுர் ஆன் கூறுகின்றது:

فَأَقِمْ وَجْهَكَ لِلدِّينِ حَنِيفًا ۚ فِطْرَتَ ٱللَّهِ ٱلَّتِى فَطَرَ ٱلنَّاسَ عَلَيْهَا ۚ لَا تَبْدِيلَ لِخَلْقِ ٱللَّهِ ۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلْقَيِّمُ وَلَٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ ﴿٣٠﴾ **(الروم: 30)**

பொருள்: (நபியே) ஒருமனப்பட்ட நிலையில் உங்களுடைய முகத்தை இந்த தீனின் பக்கம் நிலைப்படுத்துங்கள். அல்லாஹ் மனிதர்களை எந்த இயற்கை அமைப்பில் படைத்திருக்கின்றானோ அந்த இயல்பான அமைப்பிலேயே நிலைத்திருங்கள். அல்லாஹ்வினால் படைக்கப் பட்ட இயல்பான அமைப்பில் மாறுதல் செய்யமுடியாது. இதுதான் முற்றிலும் சீரான செம்மையான மார்க்கமாகும். ஆயினும், பெரும் பாலான மக்கள் இதனை அறிவதில்லை (அர்ரூம்: 30).

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَا مِنْ مَوْلُودٍ إِلَّا يُولَدُ عَلَى الفِطْرَةِ، فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ أَوْ يُنَصِّرَانِهِ، أَوْ يُمَجِّسَانِهِ

பொருள்: எந்த ஒரு பிறக்கும் குழந்தையும் இயற்கையான இயல்பு களுடனேதான் பிறக்கின்றன, அக்குழந்தையின் பெற்றோர்கள்தான் அதனை யூதனாகவோ, கிறித்துவனாகவோ அல்லது மஜூசியாகவோ (நெருப்பை வணங்குபவர்கள்) ஆக்கிவிடுகின்றனர் (புக்ஹாரி). ஒரு முஸ்லிம் தன்னுடைய இயற்கையான இயல்பின் அடிப்படையில் தான் அல்லாஹ் இருக்கின்றான் என்று நம்பிக்கை வைத்திருக்கின் றான். பெருமளவிலானோர் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதுமில்லை மறுமையை நம்புவதுமில்லை. அவர்களுடைய கொள்கையின் அடிப்படையில் இயற்கையின் விதிகளின் அடிப்படை யில் அனைத்துப் பொருட்களும் உண்டாகிவிடுகின்றன. இவ்வாறான கருத்துக்களையுடைய சிலர் இமாம் ஷாஃபியி (ரஹ்) அவர்களிடம் வந்து அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின் றது என்று கேட்டனர். இமாம் ஷாஃபியி (ரஹ்) அவர்கள் பதில் கூறி னார்கள்: முசுக்கட்டையின் இலை ஒன்றுதான் இருக்கின்றது, ஆனால் அதனைப் பட்டுப்புழு சாப்பிட்டு பட்டைத்தயாரிக்கின்றது, அதனை தேனீ சாப்பிட்டுத் தேனைத் தருகின்றது, அதனை ஆடு மாடுகள் சாப் பிட்டு சாணத்தைப் போடுகின்றன. இந்த ஒரே உணவினைக்கொண்டு விதவிதமான பொருட்களை யார் உண்டாக்குகிறான்? இமாம் ஷாஃபியி (ரஹ்) அவர்களுடைய பதில் அவர்கள் மனதில் பட்டது, அனைவருமே ஈமான் கொண்டுவிட்டனர்.

இறை மறுப்பாளர்கள் சிலர் ஹஜ்ரத் ஜாஃபர் ஸாதிஃக் (ரஹ்) அவர்க ளிடம் வந்தனர். அப்போது அவர்களில் ஒருவரிடம் கேட்டார்கள், நீங் கள் எப்போதாவது கடல் பயணம் செய்ததுண்டா? அவர் கூறினார், ஆம். ஹஜ்ரத் ஜாஃபர் ஸாதிஃக் (ரஹ்) அவர்கள் கூறினார்கள், அந்தப்

www.uzairfalahi.com

பயணத்தில் ஏதும் வினோதமான நிகழ்வு ஏற்பட்டிருந்தால் அதனைப் பற்றிக்கூறுங்கள். அவர் கூறினார், ஒருநாள் கடுமையான காற்று வீசியது, கப்பலும் உடைந்துவிட்டது, அனைவரும் மூழ்கிவிட்டனர். நான் ஒரு மரப்பலகையினைப் பற்றிக்கொண்டு அலைமோதல்களைச் சமாளித்துக்கொண்டிருந்தேன், இந்நிலையில் அந்த மரப்பலகையும் என் கையிலிருந்து விடுபட்டுவிட்டது, இறுதியில் நான் ஒரு கரையை அடைந்தேன். ஹஜ்ரத் ஜாஃபர் (ரஹ்) அவர்கள் கேட்டார்கள் உங்களிடம் கப்பல், மாலுமிகள், மரப்பலகை ஆகியவற்றின்மீது அவை உங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் என்ற நம்பிக்கை இருந்தது, ஆனால் அதற்குப்பின் நீங்கள் நான் இறந்துவிடுவேன் என்று நினைத்தீர்களா அல்லது தப்பிக்கும் நம்பிக்கை ஏதும் உங்களுக்கு இருந்ததா? அவர் கூறினார், நம்பிக்கை இருந்தது. ஹஜ்ரத் ஜாஃபர் (ரஹ்) அவர்கள் கேட்டார்கள் எதன்மீது நம்பிக்கை இருந்தது? அவனிடம் பதில் இருக்கவில்லை, நிசப்தமாக இருந்தான். அவர்கள் கூறினார்கள், யார் உன்னைப் படைத்தானோ அவன்மீதுதான் இறுதியில் உனக்கு நம்பிக்கை இருந்தது, அவனேதான் உன்னை மூழ்கிவிடுவதிலிருந்து காப்பாற்றினான். அவன் அவர்களுடைய பேச்சைக்கேட்டு அல்லாஹ் இருக்கின்றான் என்று நம்பத்துவங்கினான், அவர்களுக்குமுன்பாக ஈமான் கொண்டான்.

* * *

www.uzairfalahi.com